# சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும் (பாகம் - V)

**(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B )**

1978ம் ஆண்டைய அரசியலமைப்பானது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதிக்கு சகல அதிகாரங்களையும் பிரயோகிக்கக் கூடியதான வல்லமையைக் கொடுத்துள்ளது. அதாவது ஒரு பண்டைக்காலத்து அரசனைப் போன்று ஆட்சியைச் செலுத்தலாம். இதன் நோக்கம் அரசாங்கத்தின் திட்டங்களை அமுல்படுத்துவதில் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும் அதனால் நாட்டின் பொருளாதாரத்தில் அபிவிருத்தியையும் கீழ்மட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் வழி செய்வற்கேயாகும்.

அத்துடன் இந்த அரசியலமைப்பு ஜனாதிபதி ஒருவரை தேர்தல் மூலம் மக்களால் தெரிவுசெய்ய ஏற்பாடு கொண்டுள்ளது. அதனால் சிறுபான்மையினரின் வாக்குகளும் வேட்பாளர் வெற்றியடைய வேண்டியதாகவிருப்பதால் அவர்களின் நலனையும் பேணக்கூடிய தேவையும் ஏற்படுகின்றது. கடந்த ஜனாதிபதி தேர்தல் முடிவில் நிகழ்ந்ததுபோல சிறுபான்மை மக்களின் வாக்குகளே வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக பெறுமதி வாய்ந்தனவாக அமையவும் இடமுண்டு.

இருந்தாலும் அக்காலத்திலேயே முதுபெரும் இடதுசாரி அரசியல்வாதியான டாக்டர் என்.எம்.பெரேரா கூறியிருந்தது அண்மையில் ஜனாதிபதிகளாக ஆகியவர்களைக் குறி வைத்துக் கூறியது போல உள்ளது. ஜனாதிபதியானவர் எல்லா வல்லமையும் பொருந்தியவராக இருப்பதால் நல்ல பண்புள்ளவர்கள் மக்கள் நலனில் அக்கரை கொண்டவர்கள் அப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் போது மட்டும் அரசியலமைப்பின் நோக்கம் நிறைவேறும் என்றும் சுயநலங் கொண்டவர்கள் பதவிக்கு ஆசைப்பட்டு தெரிவாகியிருந்தால் எல்லாம் தலைகீழாக நடைபெறக் கூடியதாகவும் நாட்டுக்கு கேடான நிலைமையும் ஏற்படலாம். இதனையே என். எம். பெரேரா அன்று மறைமுகமாகக் கூறியிருந்தார். இதற்கு நல்ல சான்றாக ஜனாதிபதிகளாகவிருந்த ரணசிங்க பிரேமதாசாவையும் மஹிந்த ராஜபக்ஷாவையும் ஒப்பிடும்போது அந்த இரண்டு விதமான போக்குகளையும் அவதானிக்கலாம்

**மக்களோடு நேரடித் தொடர்பு**

1978ம் ஆண்டைய அரசிலமைப்பு வெஸ்மினிஸ்டர் பாராளுமன்ற முறைமையிலிருந்து விலகி பிரதமர் தலைமையிலான அமைச்சரவைக்குப் பதிலாக ஜனாதிபதியின் தலைமையில் அமைச்சரவை என்ற மாற்றம் ஜனாதிபதிக்கு விஷேட தத்துவங்களைக் கொடுப்பதை உறுதிசெய்கின்றது. அதன் காரணமாக பாராளுமன்றத்தின் மீயுயர்தன்மை என்ற தத்துவம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

**உறுப்புரை 30 (2) டின்படி ஜனாதிபதி மக்களினால் தேர்தெடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவரின் பதவிக் காலம் ஆறு ஆண்டுகள் கொண்ட ஒரு தவணையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.** இதனால் ஜனாதிபதியானவர் பாராளுமன்றத்தின் தொடர்பின்றி சுதந்திரமாக மக்களிடமிருந்து நேரடியாக அதிகாரத்தைப் பெற ஏற்பாடு செய்துள்ளது.

**உறுப்புரை பிரிவு 4 (ஆ) யின்படி உள்நாட்டுப் பாதுகாப்பு உட்பட மக்களது ஆட்சித்துறைத் தத்துவம் மக்களால் தெரிவுசெய்யப்படும் குடியரசு ஜனாதிபதியினால் பிரயோகிக்கப் படுதல் வேண்டும்.** இதன் பொழிப்பு நிறைவேற்றுத்துறையின் அதிகாரங்கள் யாவும் ஜனாதிபதியிடம் மாத்திரமே ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதாகும்..

**உறுப்புரை 32 (2) டின்படி பாராளுமன்ற உறுப்பினர் பதவி உட்பட ஜனாதிபதியாவதற்கு முன்பு வகித்த பதவிகள் அனைத்தும் இல்லாது போவதற்கு ஏற்பாடுள்ளது.**

**உறுப்புரை 43 (2) பாராளுமன்றத்தில் ஆளும்கட்சியினரின் வாக்குப் பலம் குறைவடைந்து அமைச்சரவை கலையவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போதும் கூட ஜனாதிபதி பாதிக்கப்படாது தொடர்ந்திருக்க ஏற்பாடு செய்கின்றது.**
நடைமுறையில் பிரதம அமைச்சரையும் ஏனைய அமைச்சர்களையும் கொண்ட கபினெற் நிறைவேற்று அதிகாரங்களை ஜனாதிபதி தலைமையில் கொண்டிருந்த போதிலும் அவர்கள் பாராளுமன்றத்திலிருந்து வந்துள்ளபடியால் இங்கு வலுவேறாக்கற் கோட்பாடு செயற்பட முடியாது என வாதிடலாம். ஆனால் அரசியலமைப்பு வெளிப்படையாகவே ஜனாதிபதியிடம் நிறைவேற்று அதிகாரங்களை வழங்கி இருப்பதினால் கபினெற் அமைச்சர்கள் கொண்டுள்ள நிறைவேற்று அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களாக (delegated Powers) கொள்ளப்படல் வேண்டும்.

**உறுப்புரை 42 ஜனாதிபதியானவர் அரசியலமைப்பு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு சட்டம் உட்பட எழுத்திலான சட்டத்தின் கீழ் தமது தத்துவங்களை பிரயோகிப்பதற்கும் பணிகளை நிறைவேற்றுவதற்கும் கடமைகளைப் புரிவதற்கும் பாராளுமன்றத்திற்கு பொறுப்பாயிருத்தல் வேண்டும் என்கின்றது.** இதனால் ஜனாதிபதிப் பதவியும் பாராளுமன்றமும் ஒன்றையொன்று தழுவி நடக்கவேண்டியளவுக்கு கண்காணிப்பு சமநிலை (Check and Balance ) ஏற்பாடு சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி பதவி ஏற்கும்போதும் அரசியலமைப்பு ஏற்பாடுகளை நிலைநிறுத்துவேன் என சத்தியம் செய்கின்றார்.

**உறுப்புரை 38 (2) ஜனாதிபதி அரசியலமைப்பு ஏற்பாடுகளை வேண்டுமென்றே மீறினால்: தேசத் துரோக குற்றம் புரிந்தால்: இவஞ்சம் பெற்றிருந்தால்: பதவிக்குறிய அதிகாரங்களை துஸ்பிரயோகம் செய்திருந்தால்: துர்நடத்தைக்கான அல்லது ஊழலுக்கான குற்றம் புரிந்திருந்தால்: ஏதாவது சட்டத்தின் கீழ் ஒழுக்கக்கேட்டை உட்புகுத்தும் தவறு செயதிருந்தால் அல்லது மனப்பலவீனம் அல்லது உடற் பலவீனம் காரணமாக பதவியை கொண்டு நடாத்த முடியாத நிலையிலுள்ளார் என ஏதாவதொரு குற்றத்தை முன்வைத்து பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சபாநாயகருக்கு கடிதம் மூலம் உயர் நீதிமன்றினால் விசாரணை செய்யவேண்டுமென வேண்டுகோள் விடுக்குமிடத்து அதை 2/3 உறுப்பினர்கள் ஆதரித்தும் பின்னர் உயர் நீதிமன்ற விசாரணையிலும் குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஜனாதிபதியை பதவியினின்றும் அகற்றலாம்.**

தமிழ் மொழியின் நிலைமை

மொழி என்ற தலையங்கத்தில் அத்தியாயத்தில் IV இல்
**உறுப்புரை 18இல் சிங்கள மொழி அரச கரும மொழியாகவிருத்தல் வேண்டும்** எனக் கூறியுள்ளது.

**உறுப்புரை 19ல் இலங்கையில் தேசிய மொழிகளாக சிங்களமும் தமிழும் இருத்தல் வேண்டும்** என்று கூறுகிறது. இது நல்லிணக்க இன ஐக்கியத்திற்கு ஒரு நல்ல முன்னேற்றகரமான மாற்றமாக கருதப்படுகிறது.

**உறுப்புரை 20 பாராளுமன்றத்தில் உள்ளூராட்சி சபைகளில் நடபடிக்கையின் போதும் எந்தத் தேசிய மொழியிலும் பேசிப் பங்குபற்றலாம்** என்கின்றது.

**உறுப்புரை 21 எந்தத் தேசிய மொழிகளிலும் கல்வி கற்க உரித்துண்டு** எனக் கூறுகிறது.

**உறுப்புரை 22 டின்படி அரச கரும மொழியே நிருவாக மொழியாதல் வேண்டும். ஆயினும் வட-கிழக்கில் பதிவேடுகள் பேணுவது பகிரங்க நிநுவனங்களின் அலுவல்கள் யாவும் கொண்டு நடாத்தப்படுவதற்கு தமிழ் மொழியும் நிருவாக மொழியாதல் வேண்டும்** எனக் கூறுகின்றது.

**உறுப்புரை 23 எல்லாச் சட்டங்களும் துணைநிலைச் சட்டவாக்கங்களும் இரண்டு தேசிய மொழிகளிலும் இருத்தல் வேண்டும். அதன் ஆங்கில மொழி பெயர்ப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்** எனக் கூறுகிறது. .

**உறுப்புரை 24 அரசகரும மொழியே நீதிமன்றங்களின் மொழியாக இருத்தல் வேண்டும் அவற்றின் பதிவேடுகளும் நடவடிக்கைகளும் அரச மொழியிலேயே இருத்தல் வேண்டும் ஆயினும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் முதனிலை நியாயாதிக்கத்தினை பிரயோகிக்கும் நீதிமன்றங்களின் மொழி தமிழ் மொழியாக இருத்தல் வேண்டும். அத்துடன் அவற்றின் பதிவேடுகளும் நடவடிக்கைகளும் தமிழ் மொழியிலேயே இருத்தல் வேண்டும்** எனக் கூறுகின்றது.

**உறுப்புரை 25 - இந்த அத்தியாயத்தின் ஏற்பாடு செய்யப்பட்டவாறான மொழியைப் பயன்படுத்துவதற்கு போதுமான வசதிகளை அரசு ஏற்பாடு செய்தல் வேண்டும்** என மேலும் கூறுகின்றது.

முதலாவது குடியரசு அரசியலமைப்பில் ( 1972 )தமிழ் மொழிக்கான அந்தஸ்து மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றது. அதில் **அத்தியாயம் 3 இல் உறுப்புரை 7 -இலங்கையின் அரசகரும மொழி 1956ஆம் ஆண்டின் 33ம் இலக்க அரச கரும மொழிச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு சிங்கள மொழியாதல் வேண்டும்** என்கின்றது..

**உறுப்புரை 8 இன்படி தமிழ் மொழியின் உபயோகம் 1958ம் ஆண்டின் 28ஆம் இலக்க தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள் ) சட்டத்திற்கு இணங்கவிருத்தல் வேண்டும்** எனக் கூறுகின்றது.

**உறுப்புரை 9 (1) சட்டங்கள் யாவும் சிங்களத்தில் சட்டமாக்கப்படல் அல்லது இயற்றப்படல் வேண்டும்** என்கின்றது.

**ஊறுப்புரை 9 (2) இயற்றப்படும் சட்டங்கள் ஒவ்வொன்றினதும் தமிழ் மொழிபெயர்ப்பு ஒன்றும் இருத்தல் வேண்டும்** என்கின்றது.

**உறுப்புரை 11 நீதிமன்ற மொழி நடவடிக்கைகள் பதிவேடுகள் யாவும் சிங்களத்தில் இருத்தல் வேண்டும் என்பதோடு வடக்கு கிழக்கு மாகாணங்களில் நீதிமன்ற மொழி**

**பற்றி தேசிய அரசுப் பேரவை சட்டமியற்றி வேறு வகையில் ஏற்பாடு செய்யலாம்** எனக் கூறுகின்றது**.**

மேற்கூறப்பட்டனவையெல்லாம் அந்தந்த அரசியலமைப்பில் அவை ஆக்கப்படும்போது செய்யப்பட்ட ஏற்பாடுகளே. பின்னர் திருத்தச் சட்டங்களினால் பல முன்னேற்றகரமான முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளதை திருத்தச் சட்டங்கள் பற்றி ஆராயும்போது அவதானிக்கலாம்.

(தொடரும்)